



# கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

## மானியக் கோரிக்கை எண். 18

அறிவிப்புகள்

**2024-2025**

# கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

மானியக் கோரிக்கை எண்.18

அறிவிப்புகள்
2024-2025

**ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
அமைச்சர்

# கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

**1) நீலகிரி மாவட்டத்தில் மண்பாண்ட தொழிலில் ஈடுபட்டுவரும் 150 மலைவாழ் பழங்குடியின நபர்களுக்கு கலைநயமிக்க மண்பாண்ட பொருட்கள் தயாரித்திட வேண்டி பயிற்சி மற்றும் தென்காசி, சிவகங்கை, கடலூர், இராணிப்பேட்டை மற்றும் வேலூர் மாவட்டங்களில் இத்தொழிலில் ஈடுபட்டுவரும் 200 நபர்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் விதமாக உரிய பயிற்சி ரூ.45.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.**

மண்பாண்ட தயாரிப்பில் ஆரம்ப நிலையில் உள்ள மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு அனுபவமிக்க பயிற்றுநர் மூலம் உரிய உபகரணங்களைக் கொண்டு கலைநயமிக்க மண்பாண்டங்கள் செய்திட பயிற்சி அவசியம் தேவைப்படுகிறது. எனவே, கீழ்கோத்தகிரி, புதுகோத்தகிரி, குந்தா-கோத்தகிரி, கொல்லிமலை மற்றும் கூடலூர் கோக்கால் ஆகிய பகுதிகளில் உள்ள 150 நபர்களுக்கு நவீன கலைநயமிக்க மண்பாண்டங்கள் தயார் செய்வதற்கான பயிற்சிகள் ரூ.25.00 இலட்சம் செலவிலும் மற்றும் தென்காசி, சிவகங்கை, கடலூர், இராணிப்பேட்டை மற்றும் வேலூர் மாவட்டங்களில், மண்பாண்ட தொழிலில் ஈடுபட்டுவரும் 200 நபர்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் விதமாக, நவீன உபகரணங்களைக் கொண்டு சந்தையில் எளிதில் விற்பனை ஆகக்கூடிய டெரக்கோட்டா மற்றும் அழகுமிக்க மண்பாண்ட பொருட்கள் தயாரித்திட தேவைப்படும் பயிற்சிகள் ரூ.20.00 இலட்சம் செலவிலும், ஆக மொத்தம் ரூ.45.00 இலட்சம் செலவில் உரிய பயிற்சிகள் அளிக்கப்படும்.

**2) வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் ஈரோடு, திருவண்ணாமலை மற்றும் கொடைக்கானல் கதரங்காடிகள் ரூ.45.00 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.**

"கதர் அங்காடிகள் கதர் வாரியத்தின் முகம்" என்பதை கருத்தில் கொண்டு அவற்றை நவீனப்படுத்துவது அவசியமாகும். அதன்படி, வாடிக்கையாளர்களை கவரும் விதத்திலும், கதர் வாரிய பொருட்களை அதிகளவில் காட்சிப்படுத்தி விற்பனையை அதிகரித்திடவும் ஈரோடு, திருவண்ணாமலை மற்றும் கொடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள 3 கதரங்காடிகள் ரூ.45.00 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.



# தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

## 3) இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் பனை பொருட்கள் வர்த்தக மையம் ஒன்று ரூ.20.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கிய தொழில் பனைத்தொழிலாகும். வறுமை கோட்டிற்கும் கீழ் உள்ள மக்கள் பெரும்பாலும் இத்தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீர், பனைவெல்லம், பனங்கற்கண்டு மற்றும் தும்பு போன்ற பனைபொருட்களை உற்பத்தி செய்து மற்றும் விற்பனை மேற்கொண்டு வருவாய் ஈட்டி வருகின்றனர்.

இப்பனைத்தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பனைபொருட்களை சந்தைப்படுத்த இராமநாதபுரம் - சிவகங்கை மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு விற்பனை சம்மேளனம் 10,000 உறுப்பினர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது.

பனைத் தொழிலாளர்கள் பெரும்பாலானோர் தொழில் ஆரம்பித்திட தனிநபர்களிடம் முன்பணம் பெற்று அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பனைவெல்லம் அனைத்தும் முன்பணம் பெற்று தனிநபர்களிடம் குறைந்த விலைக்கு விற்பனை செய்து குறைந்த வருவாய் ஈட்டி வருகிறார்கள். எனவே, மாவட்ட சம்மேளனத்தின் மூலம் நேரடியாக பனை வெல்லம் கொள்முதல் செய்து விற்பனை செய்வதன் மூலம் பனைத் தொழிலாளர்களின் வருவாய் அதிகரித்திட இயலும் என்பதை கருத்தில் கொண்டு இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் பனை பொருட்கள் வர்த்தக மையம் ஒன்று ரூ.20.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**4) தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணைய மானாமதுரை கிளையில் பனந்தூரிகை தயாரிக்கும் தொழில்நுட்ப பயிற்சி 60 நாட்கள், 25 நபர்களுக்கு, ரூ.5.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணைய மானாமதுரை கிளையில் பனந்தூரிகை தயாரிக்கும் இயந்திரங்கள் புதியதாக கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளன. இவற்றை இயக்கி உற்பத்தி மேற்கொள்ள தேவையான தொழில்நுட்பம் தெரிந்த தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் இப்பகுதியில் உள்ள ஆர்வமுள்ள நபர்களுக்கு போதிய தொழில்நுட்ப பயிற்சி வழங்கினால் உற்பத்தி திறன் அதிகரித்திடவும், இப்பகுதியில் உள்ள மக்களுக்கு வருவாய் ஈட்டிடவும் வழிவகுக்கும். எனவே, தொழில்நுட்ப பயிற்சி 60 நாட்கள், 25 நபர்களுக்கு, ரூ.5.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
அமைச்சர்